# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.13

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.கிரகலட்சுமி | Caste | : |
| Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 17th day of April, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது நீண்ட நாள் விடுப்பில் இருந்து வருகிறேன். கடந்த 23.06.2022 ம் தேதி நான் வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை பெண் காவலராக பணியாற்றியபோது, நிலைய குற்ற எண்.178/2022 U/s 174(3) Cr.P.C., வழக்கின் எதிரியின் மாதிரி கையொப்பம் பெற்ற தபாலை சாத்துார், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் வேண்டுகோளின்படி ஒப்புகை சீட்டு பெற்று சாத்துார் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் 2 நீதிமன்றத்தில் அறிக்கை செய்து வழக்கின் ஆவணங்களை பெற்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகம் சென்று ஒப்படைத்து ஒப்புகை சீட்டு 99/2022 பெற்று சாத்துார் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் 2 நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பின்னர் நிலையம் வந்து அறிக்கை

**செய்தேன். இது சம்மந்தமாக சாத்தூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.**

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை– இல்லை.</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.14

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ராமமூர்த்தி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 17th day of April, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது ஏழாயிரம்பண்ணை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.05.2022 ம் தேதி இரவு 08.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும் போது தென்காசி தாலுகா, கலிங்கப்பட்டி மேலத்தெருவை சேர்ந்த சுப்புத்தேவர் மகன் வெள்ளைச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி என்னிடம் கொடுத்த புகாரைப் பெற்று சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் தகவல் தெரிவித்துவிட்டு புகார்மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.178/2022 U/s 174(3) Cr.P.C., வழக்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.22 ஆகும். பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் இணைத்து வழக்கில் இறந்துபோன காயத்ரி என்பவருக்கு திருமணம் நடைபெற்று 7 வருடங்களுக்குள் இறந்துவிட்டதால் வரதட்சணை கொடுமை காரணமாக இறப்பு நிகழ்ந்துள்ளதாக என்ற விவரத்தை

அறியும் பொருட்டு விசாரணை செய்து அறிக்கை வழங்கக்கோரி வேண்டுகோள் கடிதத்தை அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சம்பவ இடத்தில் இருந்த காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் விசாரணைக்கு முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை சமர்பித்தேன். இது சம்மந்தமாக சாத்துார் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி, நேரம் 25.05.2022 ம் தேதி காலை 11.00 மணி என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்தது 25.05.2022 ம் தேதி 20.00 மணி என்றால் சரிதான். சுமார் 9 மணி நேரம் காலதாமதமாக இந்த புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுமார் 9 மணி நேரம் காலதாமதமாக இந்த புகார் அளிக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் முதல் தகவல் அறிக்கையின் 8 வது காலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரி தான் காரணம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரின் 3 வது பக்கத்தில் காயத்ரி இன்று கடைசியாக காலை 11.00 மணிக்கு என் மகன் அஜித்குமாருக்கு போன் பண்ணியதாக என்ற வார்த்தை இடைசெருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரை வெள்ளைச்சாமி என்பவர் எழுதி கொண்டு வந்தார். புகாரை எங்கு வைத்து எழுதினீர்கள் என்று விசாரிக்கவில்லை. பொதுவாக 174(3) Cr.P.C., வழக்கை விசாரணைக்காக வருவாய் வட்டாட்சியரிடம் தான் அனுப்பவேண்டும் என்றால் திருமணம் நடைபெற்று 7 ஆண்டுகளில் இறந்துவிட்டதால் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் வருவாய் கோட்டாட்சியர் எந்த இடத்திலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான், இணைப்பு கடிதம் உள்ளது. முதல் தகவல் அறிக்கை 27.05.2022 ம் தேதி 06.50 மணிக்கு சாத்துார் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் 2 அவர்கள் பெற்றுக்கொண்டதாக காணப்படுகிறது

என்றால் சரிதான். புகாரை அ.சா.1 வெள்ளைச்சாமி என்னிடம் புகார் வாக்குமூலமாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் அ.சா.1 வெள்ளைச்சாமி சம்பவம் குறித்த புகாரை என்னிடம் புகார் வாக்குமூலமாக அளித்தார் என்றாலும், அது வழக்கிற்கு விரோதமாக இருந்த காரணத்தால் மறைக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் முதல் தகவல் அறிக்கையுடன் சேர்த்து அனுப்பிய இணைப்பு கடிதம் 27.05.2022ம் தேதி தான் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்று 2 நாட்கள் கழித்து தான் மேற்படி கோட்டாட்சியரின் இணைப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 வெள்ளைச்சாமி கொடுத்த புகார் மனுவில் காயத்ரிக்கு வாயின் வலது பக்கத்தில் இரத்தம் வழிந்து காணப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. உண்மையில் காயத்ரி இயற்கையாக மரணம் அடைந்துவிட்டார் என்றாலும், அவ்வாறு மரணம் அடையும் போது அவரது குழந்தைக்கு பாலூட்டிக் கொண்டிருந்ததால் அவர் குழந்தை மீது விழுந்து குழந்தையும் இறந்துவிட்டதாக சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>